| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 16.07.2026 | |
| STC No. 280/2024 | |
| சாட்சி :PW1 | |
| பெயர் : திரு. வடிவேல் | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. முத்துகிருஷ்ணன் | தொழில் : உணவு பாதுகாப்பு அலுவலர் |
| கிராமம் : நத்தம் | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 45 /2026 |
| ( எதிரி ஆஜர், வழக்கறிஞர் ஆஜர்) | |

-------------------------------------------------------

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1.நான் திருச்சி மாவட்டம் மணச்சநல்லூர் வட்டார உணவு பாதுகாப்பு அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். 11.11.2022 அன்று சுமார் மாலை 04.00 மணியளவில் வையம்பட்டி வட்டார சக்கம்பட்டி பகுதிகளில் உணவு மாதிரி பரிசோதனைக்காக எடுக்கும்பொருட்டு சக்கம்பட்டியில் உள்ள M/S காருணியா அக்குவா என்ற நிறுவனத்தில் நான் ஆய்வு மேற்கொண்டேன். அப்போது அந்த நிறுவனத்தின் அலுவலகத்தில் ஜோதி வெங்கடேஸ்வரி என்பவர் இருந்தார். அவர் உணவுப்பொருட்களை விற்பனை செய்து கொண்டிருந்தார். அவரிடம் என்னை நான் அறிமுகம் செய்துக்கொண்டு அந்த நிறுவனத்தின் உரிமையாளர் குறித்து விபரம் கேட்ட போது அவர்தான் அந்த நிறுவனத்தின் உரிமையாளர் என்று என்னிடம் கூறினார். அதற்காக அவர் உரிமம் பெற்று இருப்பதாகவும் தெரிவித்தார். நான் அவரது சான்றிதழை சரிபார்த்தேன். நான் ஆய்வு செய்த போது மனித உணவுப்பொருளாகவும், உணவுப்பொருள் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த ஒரு லிட்டர் அளவுள்ள நலம் நீர் Packaged Drinking Water பாட்டில்கள் இருந்தன. அவற்றை கணக்கு எடுத்ததில் 1368 பாட்டில்கள் இருந்தன. அந்த பாட்டில்கள் குறித்து நான் கேட்ட போது ஜோதி வெங்கடேஸ்வரி அவர்கள் மேற்படி பாட்டில்கள் அனைத்தும் M/S காருணியா அக்குவா என்ற நிறுவனத்தில் தயார் செய்யப்பட்டவை என்று தெரிவித்தார். மேற்படி அந்த நலம் நீர் Packaged Drinking Water பாட்டில்களில் உணவு கலப்படம் இருக்குமோ என்ற சந்தேகத்தின் அடிப்படையில் அவற்றை நான்

உணவு மாதிரி எடுப்பதற்காக பரிசோதனை செய்திட தேவையான காரணங்களை எதிரி ஜோதி வெங்கடேஸ்வரி அவர்களிடம் தெரிவித்தேன். அதற்கு அவர் சம்மதம் தெரிவித்தார். அப்போது அங்கியிருந்த சரவணக்குமார் என்பவர் முன்னிலையில் அங்கியிருந்த நலம் நீர் Packaged Drinking Water பாட்டில்களில் பரிசோதனைக்காக 16 பாட்டில்களை ரூ.128/- ரொக்கமாக விலை கொடுத்து வாங்க முழு சம்மத்தின் பெயரில் ஜோதி வெங்கடேஸ்வரி ரொக்க ரசீது கொடுத்தார். அதில் மேற்படி எதிரியும், சாட்சி சரவணக்குமார் கையெழுத்து செய்தார்கள். தொடர்ந்து உணவு மாதிரி எடுக்கும் முறையை பயன்படுத்தி படிவம் 5 A 2 பிரிதிகள் தயாரித்து அதில் ஒன்றை எதிரிக்கு சார்வு செய்து அவற்றில் எதிரியும் சாட்சியும் கையொப்பம் செய்தார்கள். தொடர்ந்து விலைக்கு வாங்கிய நலம் நீர் Packaged Drinking Water வாங்கிய பாட்டில்களை பேக்கிங் நிலையிலேயே நான்கு சமபாகங்களாக பிரித்து உணவு மாதிரி அடங்கிய விபரச்சீட்டினை முழுமையாக பூர்த்தி செய்து உரிமையாளர் ஜோதி வெங்கடேஸ்வரி அவர்களிடம் கையொப்பம் பெற்றேன். அவற்றை மேற்படி பிரிக்கப்பட்ட நான்கு உணவு மாதிரி பாக்கெட்டுகளில் ஒட்டினேன். மேற்படி உணவு மாதிரி பாக்கெட்டுகளை தனித்தனியே காக்கி பேப்பரினால் முறையாக சுற்றி பசை தடவி ஒட்டினேன். பின்பு நியமன அலுவலரிடம் பெறப்பட்ட கையொப்பமிட்ட கோடு எண். 028 வரிசை எண்.510/2022 – 2023 கொண்ட நான்கு வெள்ளை நிற பேப்பர் சீலிப்பினை ஒவ்வொரு உணவு மாதிரிகளிலும் தனித்தனியாக ஒட்டினேன். ஒவ்வொரு உணவு மாதிரிகளிலும் எதிரியிடம் கையொப்பம் பெற்றேன். மேற்படி உணவு மாதிரிகள் முறையே சீல் வைக்கப்பட்டது. உணவு மாதிரி நான்காவது பாகத்தினை தனியார் பரிசோதனைக்கு அனுப்ப விருப்பமா என எதிரியிடம் கேட்டதற்கு அவர் சம்மதம் இல்லை என எழுத்து மூலமாக சம்மத கடிதம் வழங்கினார். பின்னர் உணவு மாதிரிகளுடன் அலுவலகம் வந்து நியமன அலுவலருக்கு இது குறித்து உணவு மாதிரிகளை பரிசோதனைக்கு அனுப்புவதற்காக முறையாக தகவல் தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து படிவம் -6 நகல்களும் மாதிரி முத்திரைதாள் படிவங்களும் தயாரிக்கப்பட்டது. உணவு மாதிரிகளில் மேற்கண்ட படிவங்களும் வைத்து பரிசோதனைக்கு சென்னை கிண்டி உணவு பகுப்பாய்வு கூடத்திற்கு அனுப்பட்டது. மீதமுள்ள 3 உணவு மாதிரிகளை நியமன அலுவலர் வசம் ஒப்படைத்தேன். மேற்படி உணவு பகுப்பாய்வு கூடத்தில் உணவு பகுப்பாய்வு அறிக்கையை தாக்கல் செய்வதற்கு மேலும் அவகாசம் கேட்டு வேண்டுகோள் கடிதம் கொடுத்தார்கள். தொடர்ந்து உணவு பகுப்பாய்வாளர் மேற்படி உணவு மாதிரி தரம் குறைந்ததாகவும், தப்புகுறியீடாகவும், பாதுகாப்பற்ற உணவுப்பொருள் என்றும் 22.12.2022 அன்று அறிக்கை சமர்ப்பித்தார். தொடர்ந்து ஜோதிவெங்கடேஸ்வரி அவர்களுக்கு படிவம் – B மற்றும் படிவம் 8 மூலமாக உணவு மாதிரிகளை மறு பகுப்பாய்விற்கு அனுப்ப வாய்ப்பு வழங்கப்பட்டு கடிதம் அனுப்பட்டது. கடிதத்தை பெற்றுக்கொண்ட அவரிடம் எவ்வித விளக்கமும் வரப்படவில்லை. அதனால் எதிரிக்கு எதிராக வழக்கு

தொடர்வதற்கு அனைத்து ஆவணங்களுடன் நியமன அலுவலர் மூலம் உணவு பாதுகாப்பு ஆணையர் அவர்களுக்கு அனுமதிக்கோரி கடிதம் சமர்ப்பிக்கப்பட்டது. அவரது அனுமதியின் பேரில் எதிரிக்கு எதிராக உணவு மாதிரிகள் தரம் குறைந்ததாகவும், தப்புகுறியீடாகவும், பாதுகாப்பற்ற உணவுப்பொருள் விற்பனை செய்தமைக்காக M/S காருணியா அக்குவா என்ற நிறுவனத்தின் உரிமையாளர் ஜோதி வெங்கடேஸ்வரி குற்றம் புரிந்துள்ளார் என தெரியவருகிறது. இது தொடர்பாக கனம் நீதிமன்றத்தில் என்னால் தனி வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

**வழக்கு தொடர்பான ஆவணங்கள் பட்டியல் :**

1.தமிழ்நாடு அரசிதழ் (No.103), No.II(2) HF/217(a–4)2012

2. உணவு பாதுகாப்பு ஆணையர் அவர்களின் நாளிட்ட உணவு பாதுகாப்பு அலுவலரின் பணிமாறுதல் ஆணை நகல்

3.குற்றம் சாட்டப்பட்டவர்களின் (A1) –ன் ஆதார் அடையாள அட்டை நகல்.

4. படிவம் VA – எதிரி A– 1 க்கு சார்பு செய்தது.

5.ரொக்க ரசீது

6.உணவு விற்பனையாளரின் வாக்குமூலம்.

7. விற்பனையாளர் உணவு மாதிரியை NABL ஆய்வகத்திற்கு அனுப்ப விருப்ப இல்லை என எழுத்துப்பூர்வமாக கொடுக்கப்பட்ட கடிதம்.

8.படிவம் VI

9. மாதிரி அரக்கு முத்திரை பதித்த தாள்.

10.நியமன அலுவலர் திருச்சி மாவட்டம் அவர்ளுக்கு உணவு மாதிரி எடுத்து பகுப்பாய்வுக்கு அனுப்புவது குறித்த தகவல் கடிதம்.

11.நியமன அலுவலரின் ஒப்புகை கடிதம்.

12. உணவு பகுப்பாய்வாளர் அவர்களுக்கு உணவு மாதிரி, அனுப்பி வைக்கப்பட்டதற்கான கூரியர் ரசீது.

13.உணவு பகுப்பாய்வாளர் அவர்களுக்கு படிவம் VI, மாதிரி முத்திரை தாள் அனுப்பி வைக்கப்பட்டதற்கான கூரியர் ரசீது.

14. உணவு பகுப்பாய்வாளரின் தாமதக் கடிதம்.

15.படிவம் B உணவு பகுப்பாய்வாளர் அறிக்கை எண்.Act 2597/2022 –2023,

16.(A1) உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணயச்சட்டம் 2006 பிரிவு 46(4) மற்றும் உணவு பாதுகாப்பு மற்றும் விதிகள் 2011 விதி 2.4.2(6)ன் கீழ் வழங்கப்படும் அறிவிப்பு கடிதம்.

17.(A1) உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணயச்சட்டம் 2006 பிரிவு 46(4) மற்றும் உணவு பாதுகாப்பு மற்றும் விதிகள் 2011 விதி 2.4.2(6)ன் கீழ் வழங்கப்படும் அறிவிப்பு கடிதம் அஞ்சலக ரசீது

18.குற்றவியல் வழக்கு தொடர அனுமதித்து உணவு பாதுகாப்பு ஆணையர் அவர்களால் வழங்கப்பட்ட அனுமதி ஆணை **உள்ளிட்டவை முறையே அ.சா.ஆ.1 முதல் 18 ஆக குறியிடு செய்யப்படுகிறது.**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர் இல்லை, வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை செய்ய போதி வாய்ப்பு அளிக்கப்பட்டும் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/–R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.